RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1970

OPEN ACCESS

# பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அறக்கோட்பாடுகள்

ச. இராமேஸ்வரி [அ, *], ஜி.பி. முருகானந்தம் [அ]

[அ] தமிழ்த்துறை, பிஷப் ஹுபர் கல்லூரி (தன்னாட்சி), (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது), திருச்சிராப்பள்ளி-620017, தமிழ்நாடு, இந்தியா

# Virtues in Pathinenkeelkanaku text

S. Rameswari [a, *], G.P. Muruganandham [a]

[a] Department of Tamil, Bishop Heber College (Autonomous), (Affiliated to Bharathidasan University), Tiruchirappalli-620017, Tamil Nadu, India

* Corresponding Author: rrameswari915@gmail.com

Received: 13-07-2022
Revised: 01-10-2022
Accepted: 17-10-2022
Published: 10-12-2022

Check for updates

## ABSTRACT

Tamil is a language of great antiquity, rich in literature, moral ideas and sweetness. Nannul says virtue, material, pleasure and home are important for a man to lead his life happily. Eleven books out of eighteen books (Pathinenkeelkanaku text) in Tamil literature are books of virtue. Virtue is a knowledge-based philosophy of living by thinking of good deeds that bring as much benefit as possible to all human beings during their lifetime. Morality removes the selfish thoughts of a man and leads him to live a happiest life. All these eleven books of virtue consist of many moral ideas that are helpful for human beings. This article examines the overall virtues in the text and has presented the special features in them.

**Keywords:** Pathinenkeelkanaku, Literature, Sweetness

## முன்னுரை

உலக இலக்கியங்களில் தமிழ் இலக்கியங்களுக்கு எப்போதும் தனிச்சிறப்பு உண்டு. உலக இலக்கியங்கள் அனைத்தும் காலத்திற்கேற்ப பாடுபொருளை அமைத்துக் கொண்டதுடன் மையக்கருவினையும் புதிது, புதிதாக உருவாக்கிக் கொள்கின்றன. ஆனால் தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் எல்லாக் காலங்களிலும் ஒரே மையக்கருத்தைப் பாடுபொருளாக வைத்து இயற்றப் பெற்று வரும் பங்கினைக் காணமுடிகிறது. ஏனெனில் எல்லாப் படைப்புகளின் ஒரே மையக்கரு "அறம் வெல்லும், பாவம் தோற்கும்" என்ற நீதியை உணர்த்துவதாக அமைகிறது.

இவ்வுலகில் உயிர்கள் அனைத்தும் இன்புற்று வாழ்வதற்கு அடிப்படையாகத் திகழ்வது அறம் ஆகும். அறம் என்பது உயிர்களை காக்கும் கருவியாக காணப்படுகிறது. "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வானொடு முன் தோன்றிய மூத்தக்குடி" என்று புறப்பொருள் வெண்பாமாலையில் ஐயனாரிதனார் புலப்படுத்தியிருக்கிறார். பல்லாயிரம் ஆண்டுகள் கழித்தும் தமிழர்கள் தங்களுடைய பழக்க வழக்கங்களைப் பழமை மாறாமல் நடைமுறைப்படுத்திக்கொண்டே வருகின்றனர்.

நீதிமுறைகள், ஒழுக்க நெறிகளை அறிவுறுத்தும் வகையில் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் திகழ்கின்றன. அவற்றில் பதினொரு நூல்கள் அறம் சார்ந்த நூல்களாக உள்ளன. அவற்றை இயற்றிய ஆசிரியர்கள் நமக்கு அறம்சார்ந்த நீதி கருத்துகளை தொகுத்தும், பகுத்தும் வழங்கி வந்துள்ளனர். இத்தகைய அறநூல்களாகிய பதினொன்று நூல்களையும் முதன்மை ஆதாரமாகக் கொண்டு அவற்றின் பாடல்களில் வெளிப்படுத்துகின்ற அறக்கருத்துக்களை இக்கட்டுரையில் காணலாம்.

## அறம் - விளக்கம்

அறம் என்ற சொல் விரித்த பொருளையுடையது. மனிதன் புரியும் நற்செயல்கள் அனைத்தையும் இதில் அடக்கிக் கூறலாம். தமிழர் வாழக்கையில் அகவாழ்க்கையிலும், புற வாழ்க்கையிலும் அறம் - கடைபிடிக்கப்பட்டு வருதலைத் தமிழ் இலக்கியங்களில் குறிப்பாகவும், தெளிவாகவும் கூறப்பட்டுள்ளதைக் கண்டு மகிழலாம். "அறம்" என்ற சொல் நீதியைக் குறிக்கும் (Subbu Reddyar, 2012).

ஒரு மனிதன் தன்னுடைய நற்பண்புகளால் மனித உள்ளத்தில் இடம் பிடிக்கக்கூடிய நிகழ்விற்குக் காரணமாக அமைவது அறமாகும். அதாவது அறம் என்பது நல்ல செயல்களின் தொகுதி என்று பொருள் கொள்ள வேண்டும். அறம் தான் மனித வாழ்வுக்கு உயர்வைக் கொடுத்து உதவுவதோடு வாழ்வில் நலத்தை நிலை நாட்டுகிறது.

அறத்தில் கொடுக்கக்கூடியவற்றை சீத்தலைச் சாத்தனார் குறிப்பிடுகின்ற பொழுது

"அறமெனப் படுவது யாது எனக் கேட்பின்

மறவாது இது கேள் மன்னுயிர்க் கெல்லாம்

உண்டியும் உடையும் உறையுளும் அல்லது

கண்டது இல்"

என்று மணிமேகலையில் குறிப்பிடுகின்றார் (Puliyur Kesikan, 2013). அறத்தில் முதன்மையாக இருக்கக் கூடியவற்றில் உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றை மனிதன் தன் மனத்தில் எந்த விதமான குற்றவுணர்வும் இன்றி கொடுப்பதே அறம், இதனை

"மனத்துக்கன் மாசிலன் ஆதல் அனத்து அறன்

ஆகுல நீர பிற"

என்று திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார் (Puliyur Kesikan, 2008). ஒரு மனிதன், தன்னுடைய வாழ் நாட்களில் மனதளவில் எந்த ஓர் உயிருக்கும் குற்றம் செய்யாமல் இருப்பதே "அறம்" என்பதை நிலைநாட்டுகின்றார்.

ஒருவன் பிறருக்குச் சிறிது உபகாரம் செய்யும்போது அந்த மனிதன் தனக்கே பெரிய இன்பத்தைச் செய்வானாகிறான். இயன்ற அளவு சமுதாயத்திற்கு இதம் செய்கிறவன் உயர்ந்து வாழ்கிறான். அவன் புகழ் ஒளிவீசி எவ்வழியும் இனிது மிளிர்கிறது. இவ்வாறு அறநூல்கள் பற்றி அறியப்படும் கருத்தாகும் (Jagaveerapandiayanaar, 2012).

## பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்

சங்க காலத்தை அடுத்து தமிழகத்தில் இருண்ட காலம் நிலவியது இக்கால கட்டத்தில் மொழியாலும், இனத்தாலும், நாகரிகத்தாலும் முற்றிலும் வேறுபட்ட பிற இனத்தார் தமிழகத்தை ஆண்டனர். இந்நிலையில் தமிழ்மொழியும், தமிழ் மக்களும் தடுமாற்றம் அடைந்து தம் நிலை அழிந்தன. இவர்களுக்கு அன்பையும், அறத்தையும் வலியுறுத்தும் வகையில் தோன்றியதே பதினெண்கீழ்க்கணக்கு என்ற தொகுப்பாக இடம் பெற்றது, இவற்றை

"அடிநிமிர் வில்லார் செய்யுட் பொருதி

அறம் பொருள் இன்ப மடுக்கி அவ்வகை

திறம்பட உரைப்பது கீழ்க்கணக்காகும்"

என்ற பன்னிருபாட்டியல் இலக்கணத்தால் அறியலாம்.

"நாலடி, நாண்மணி, நான் நாற்பது, ஐந்நிலை, முப்

பால்கடுகம், கோவை, பழமொழி, மாமூலம்

இந்நிலைய காஞ்சியோடு ஏலாதி யென்பவே

கைந்நிலைய வாம் கீழ்கணக்கு"

இப்பதிணென்கீழ்கணக்கு நூல்களில் பதினொறு அற நூல்களும், ஆறு அக நூல்களும், ஒரு புற நூலும் உள்ளன. இத்தகைய அறநூல்கள் வாயிலாக மக்களின் நல்வாழ்விற்கு வழிகாட்டும் கருத்துக்களை பற்றி காண்போம் (Balasankar, 2012).

## ஆய்வுகளுக்குட்படுத்தப்பட்ட பதினென்கீழ்க்கணக்கு நூல்களில் அறநூல்கள் பதினொன்று

அட்டவணை 2. அறநூல்கள் பதினொன்று

| எண் | நூல் | ஆசிரியர் | பாடுபொருள் | காலம் (நூற்றாண்டு) |
|---|---|---|---|---|
| 1 | நாலடியார் | சமணமுனிவர்கள் | அறம் | கி.பி. 8 (தொகுத்து) |
| 2 | நான்மணிக்கடிகை | விளம்பிநாகனார் | அறம் | கி.பி 4 |
| 3 | இன்னாநாற்பது | கபிலர் | அறம் | கி.பி 4 |
| 4 | இனியவை நாற்பது | பூதஞ்சேந்தனார் | அறம் | கி.பி 5 |
| 5 | திருக்குறள் | திருவள்ளுவர் | அறம் | கி.மு 3 |
| 6 | திரிகடுகம் | நல்லாதனார் | அறம் | கி.பி 5 |
| 7 | ஆசாரக்கோவை | பெருவாயின் முள்ளியார் | அறம் | கி.பி 5 |
| 8 | பழமொழி | முன்றுறை அரையனார் | அறம் | கி.பி 4 |
| 9 | சிறுபஞ்சமூலம் | காரியாசான் | அறம் | கி.பி 5 |
| 10 | ஏலாதி | கணிமேதாவியார் | அறம் | கி.பி 5 |
| 11 | முதுமொழிக்காஞ்சி | கூடலூர் கிழார் | அறம் | கி.பி 7 |

## நாலடியார் காட்டும் அறம்

நாலடியார் நானூறு வெண்பாக்கள் கொண்டது, "நாலடி நானூறு என்பர்"

நாலடியாரின் பெருமையை "ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி" என்பர் "பழகு தமிழச் சொல்லருமை நாலிரெண்டில்" எனக் குறலும் நாலடியாரும் பாராட்டப்படுகின்றன.

### கற்றல் அறம்

கல்வி கரையில்லாதது மனிதனின் வாழ்நாட்களோ சில, அச்சில நாட்களில் பிணிகள் பல உள்ளன. எனவே நீரைப் பிரித்து பாலை மட்டும் பருகுகின்ற அன்னப்பறவைப் போல கற்பதற்கு ஏற்ற தகுதியான நூல்களைக் கற்க வேண்டும் என்று கற்றலறம் குறித்து நாலடியாரின் பாடல் வழி அறிய முடிகிறது.

"கல்வி கரையில கற்பவர் நால்சில

மெல்ல நினைக்கின் பிணிபல - தெள்ளிதின்

ஆராய்ந்து அமைவுடைய கற்பவே நீரொழியப்

பாலுண் குருகின் தெரிந்து"

அறன் வலியுறுத்தல் அறம்

அறம் இன்றியமையாச் சிறப்பினை வலியுறுத்தல், வற்புறுத்தல் என்பர். அறம் என்பது பிறருக்கு உதவுதல் முதலிய நற்செயல்களைக் குறிப்பதாகும் (Balasankar, 2012).

"ஆவாம் நாம் ஆக்கம் நசைஇ அறம் மறந்து

போவார் நாம் என்னாப் புன்நெஞ்சே - ஓவாது

நின்றுஏற்றி வாழ்தி எனினும் நின் வாழ்நாட்கள்

சென்றன செய்வது உரை"

பொருளாசையால், ஏராளமாகப் பொருள் சேர்க்க வேண்டி தானம் எதுவும் செய்யாமல், அலைந்து திரிவதிலேயே உன் வாழ்நாட்களை கழிக்காமல் நல்லறம் செய்ய வேண்டும். அந்த அறமே உன் மறுமைக்குச் செய்ய போவதாகிய என்பது இப்பாடல் வழி அறியமுடிகிறது (Balasankar, 2012).

“அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தால்

பெரும்பயனும் ஆற்றவே கொள்க- கரும்பூர்ந்த

சாறுபோல் சாலவும் பின்உதவி மற்றதன்

கோதுபோல் போகும் உடம்பு”

கிடைத்தற்கரிய மனித உடல் மூலம் மறுமைக்குத் தேவையான தருமத்தை அதிகம் செய்து சேமித்து வைத்துக்கொள்ள வேண்டும். கரும்பு தன்னுடைய சாற்றை அளித்துவிட்டு சக்கையாகி அழியும். அதுபோல நம் உயிர் நீங்கியபின் உடம்பும் தீயிலிட்டு எரிக்கப்படும். அதற்குள் மறுமைப் பயனாகிய அறத்தைச் செய்து கொள்ள வேண்டும் என்பதே இப்பாடல் வழி அறியமுடிகிறது. இவை அனைத்தும் நாலடியாரால் பெறப்பட்ட அறக்கருத்துகளுக்குச் சான்றுகளாகும் (Balasankar, 2012).

## நான்மணிக்கடிகை காட்டும் அறம்

நான்மணிக்கடிகை என்பதற்கு நான்கு மணிகள் பதித்த நகை என்பது பொருள். ஒவ்வொரு பாடலும் ஒரு அணிகலன் போன்றது. ஒவ்வொரு அணிகலனிலும் நான்கு இரத்தினங்கள் பதித்து வைத்தது போல் நான்கு அறக்கருத்துகள் இடம் பெற்றுள்ளது.

### ஈகை அறம்

ஈகை நல்லறங்களில் தலையாயது, இருப்பவர் இரப்பவர்களுக்கு கொடுத்தலே ஈகை எனப்படும். பயனை எதிர்பார்த்து செய்யவும் ஈகையை வளர்கடன் என்பர். பயனை எதிர்பார்த்து செய்யவும் ஈகையை வளர்கடன் என்பர். பயனை எதிர்பாராமல் வறியார்க்கு ஒன்றைக் கொடுத்தாலே ஈகை அறமாகும் இதனை

"ஈத்து உண்பான் என்பான் இசை நடுவாக மற்ற அவன்

கைத்து உண்பான் காங்கி எனப்படுவான் தெற்ற

நகை ஆகும். நண்ணார் முன் சேறல் பகை ஆகும்,

பாடு அறியாதனை இரவு" (Balasankar, 2012)

## அரசியல் அறம்

அரசாள்வோருக்கு அறிவுறுத்தும் அறிவுரைகளை பல பல இடங்களில் சுட்டுகிறார் ஆசிரியர் ஒரு நாட்டின் உயர்வுக்கு அந்நாட்டை ஆளும் அரசன் சிறந்தவனாக, நல்லவனாக அந்தக் குடிமக்களால் பாராட்டப்படுவான். குடிமக்களுக்காகத்தான் அரசே தவிர அரசுக்காக மக்கள் இல்லை, மக்களின்

குறைகளை களைந்து சிறந்த ஆட்சி செய்பவனே அரசன் என்ற அறக்கருத்து இப்பாடல் வழி அறியப்படுகிறது.

"மழை இன்றி மாநிலத்தார்க்கு இல்லை, மழையும்

தவர் இலார் இல்வழி இல்லை, தவமும்

அரசு இலார் இல்வழி இல்லை, அரசனும்

இல் வாழ்வார் இல்வழி இல்" (Balasankar, 2012)

## கல்வி அறம்

கற்றவரே கண் உடையவர் என்று புகழப்படுகின்றார். செல்வங்களுள் தலையாயது கல்வி அறம். காலத்தாலும் அழிக்க இயலாது, கல்வியால் மட்டுமே காலத்தாலும் அழியாத அறிவை உண்டாக்க வல்லது என்ற கருத்தை அறியலாம்.

"திரி அழல் காணின், தொழுப, விறகின்

எரி அழல் காணின், இகழ்ப, ஒரு குடியில்

கல்லாது மூத்தானைக் கைவிட்டு, கற்றான்"

இளமை பாராட்டும் உலகு"

இத்தகைய ஈதல் அறம், அரசியல் அறம், கல்வி அறம் நான்மணிக்கடிகையால் பெறப்பட்ட அறக்கருத்துகளுக்கு சான்றுகளாகும் (Balasankar, 2012).

## இன்னா நாற்பது காட்டும் அறம்

மக்களுக்கு துன்பந்தரும் செயல்கள் இவை என்று கூறும் நாற்பது வெண்பாக்கள் அமைவதால் இன்னா நாற்பதாயிற்று. இன்னா நாற்பது மூலம் அறியலாகும் அறக்கருத்துகளை இப்பாடல் வழி அறியலாம்.

"உண்ணாது வைக்கும் பெரும்பொருள் வைப்பின்னா

நண்ணாப் பகைவர் புணர்ச்சி நனியின்னா

கண்ணி லொருவன் வனப்பின்னா வாங்கின்னா

எண்ணிலான் செய்யுங் கணக்கு"

புணர்ச்சி - சேர்க்கை, வனப்பு - அழகு

உண்ணாது சேர்த்து வைக்கும் பெரும் பொருள் துன்பத்தை தரும் என்றும் உள்ளம் பொருந்தாத பகைவர்ளின் சேர்க்கை கூடாது என்ற கருத்தையும், கண் இல்லாத ஒருவனின் உடல் அழகு துன்பமானதே, அவ்வாறே பயிலாதவன் இயற்றும் கணக்கும் துன்பத்தை தருவதாக உள்ளதாக அறியமுடிகிறது (Balasankar, 2012).

பெருமை உடையாரைப் பீடு அழித்தல் இன்னா

கிழமை உடையாரைக் கீழ்ந்திடுதல் இன்னா

வளமை இலாளர் வனப்பு இன்னா இன்னா

இளமையுள் மூப்புப் புகல்

பீடு - இகழ்ச்சி, மூப்பு - முதுமை

பெருமையுடையோரை இகழ்ந்து கூறுதல், துன்பம் உரிமையுடையோரை நீக்கி விடுதல் துன்பமாம், செல்வம் இல்லாதவருடைய அழகும் துன்பமானதே, இளமைப்பருவத்தில் முதுமைக்குரிய தன்மைகள் புகல் துன்பமாகும் என்ற அறம் இப்பாடல் வழி அறியப்படுகிறது (Balasankar, 2012).

## இனியவை நாற்பது காட்டும் அறம்

இவையிவை இனியவை என நாற்பது பாடல்களில் கூறப்படுவதால் இப்பெயர் பெற்றது. கடவுள் வாழத்தில் சிவன், திருமால், நான்முகன் மூவரும் வணங்கப்படுகின்றனர். இனியவை நாற்பதில் உள்ள அனைத்து பாடல்களும் அறம் வழிவுறுத்துவதாக அமைந்துள்ளது.

"பிச்சை புக்கு ஆயினும் கற்றல் மிக இனிதே

நல் சபையில் கைகொடுத்தல் சாலவும் முன் இனிதே

முத்து ஏர் முறுவலார் செயல் இனிது ஆங்கு இனிதே

தெற்றவும் மேலாயார்ச் சேர்வு

இனிது - நல்லது, சேர்வு - சேர்தல்"

பிச்சையெடுத்தாவது கற்பது இனிது, அப்படிக் கற்ற கல்வி நல்ல சபையில் உதவுவது மிக இனிது. முத்தையொக்கும் மகளிரது வாய்ச்சொல் இனிது. அதுபோலப் பெரியோர்களைத் துணையாகக் கொள்ளுதலும் இனிது என்ற அறப்பாடல் வழி அறியப்படுகிறது (Balasankar, 2012).

"மானம் அழிந்தபின், வாழாமை முன் இனிதே

தானம் அறியாமைத் தான் அடங்கி, வாழ்வு இனிதே

ஊனம் ஒன்று இன்றி, உயர்ந்த பொருள் உடைமை

மானிடவர்க்கு எல்லாம் இனிது

ஊனம் - குறைபாடு"

மானம் அழிந்தபின் வாழாமை மிக இனிது என்பதும் செல்வம் சிதையாதபடி செல்வத்திற்குள் அடங்கி வாழ்தல் இனிது என்பதும், குறைபாடு இல்லாத சிறந்த செல்வத்தைப் பெற்று வாழ்வது மிக இனிதாகும் என்ற அறம் பாடல்வழி அறிய முடிகிறது (Balasankar, 2012).

"நன்றிப் பயன் தூக்கி வாழ்தல் நனி இனிதே

மன்றக் கெடும்பாடு உரையாத மாண்பு இனிதே

அன்று அறிவார் யார்"? என்று அடைக்கலம் வெளவாத

நன்றியின், நன்கு இனியது இல்,

மாண்பு - மாட்சிமை, வெளவாத - அபகரியாத"

ஒருவர் செய்த உதவியினை நினைத்து வாழ்தல் இனிய செயல் என்றும், நீதி சபையில் நடுநிலை தவறாமல் இருத்தல் சிறப்பானது என்றும் யாவருக்கும் தெரியாது என அடைக்கலமாய் வந்த எந்த பொருளையும் அபகரிக்காமல் இருத்தல் மிகவும் அறம் உடைய இனிய செயல் என பாடல்வழி அறியப்படும் செய்தியாகும் (Balasankar, 2012).

## திருக்குறள் காட்டும் அறம்

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் மிகச்சிறந்த நீதி நூல் திருக்குறள் உலகப் புகழ் பெற்ற நூல் திருக்குறள்.

திருவள்ளுவர் அறத்துப்பாலில் முப்பந்தைந்து அதிகாரங்களைப் படைத்துள்ளார். அவை மனித வாழ்வில் பின்பற்ற வேண்டிய அறங்களை எடுத்துரைப்பதாகும்.

திருவள்ளுவர் அறத்தால் வருவதே இன்பம் என்கிறார்.

இதனை,

"அறத்தால் வருவதே இன்பம்மற் றெல்லாம்

புறத்த புகழும் இல"

ஒருவன் தன் வாழ்நாட்களில் செய்ய வேண்டியன எல்லாம் அறமே, அவன் செய்யாமல் காக்க வேண்டியது எல்லாம் பழிச்செயலே என்பதை குறள் வழி அறியலாம் (Puliyur Kesikan, 2008).

"அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்

இழுக்கா இயன்றது அறம்"

பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் என்னும் நான்கிற்கும் ஒரு சிறிதும் இடம் தராமல் ஒழுதி வாழ்வதே சிறந்த அறமாகும். முதுமை காலத்தில் அறம் செய்வோம் என்று எண்ணாமல், வாய்ப்பு நேரும் காலத்தே அறம் செய்தால் அது இறக்கும் காலத்திலே அறியாத் துணையாகும் என்பதே குறள்வழி அறியலாம் (Puliyur Kesikan, 2008).

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்

தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"

தன் உணவை பகிர்ந்து கொடுத்து தானும் உண்டு பல உயிர்களைக் காப்பது சிறந்த அறமாக குறள் வழி அறியப்படும் கருத்தாகிறது (Puliyur Kesikan, 2008).

## திரிகடுகம் காட்டும் நல் அறம்

திரிகடுகம் திரி - மூன்று, கடுகம் - காரமுள்ள மருந்துப்பொருள், சுக்கு, மிளகு, திப்பிலி மூன்றும் கலந்த திரிகடுகம் உடல் நோய்க்கு மருந்து அது போல் உள்ளத்து நோய் போக்கும் மூன்று அறங்கருத்துக்களை கொண்டு அமைந்த அறநூலாகும்.

## ஈதல் அறம்

"அலந்தார்க்கு ஒன்று ஈந்த புகழும், துளங்கினும்

தன் குடிமை குன்றாத் தகைமையும், அன்பு ஓடி

நாள், நாளும் நட்டார்ப் பெருக்கலும் - இம்மூன்றும்

கேள்வியுடன் எல்லாம் தலை"

வறுமையில் வாடுபவருக்கு ஈதலே தலைசிறந்த அறமாகும் வறியோர்க்கு வழங்கும் வள்ளன்மையும், துன்பம் வந்த காலத்தும் குடிப்பிறப்புக் குன்றா இயல்பும், அன்புவழி நண்பர்களை நாளும் பெருக்கும் திறமும் கேள்விப்பட்ட எல்லாவற்றிலும் சிறந்த தலையாய அறம் என்பதை பாடல் வழி அறியப்படுகிறது (Balasankar, 2012).

## மனைவியின் கடமை

விருந்தினரை உபசரித்தலே கற்படைய பெண்ணின் கடமை என்கிறார் நல்லாதனார்.

"நல் விருந்து ஓபலின், நாட்டாளாம்

கற்புடையாள பூண்ட கடன்

நல்லோரிடம் உள்ளவை"

அறத்தை அறியக்கூடியவர் வறியவருக்குக் கொடுக்கும் இயல்பினை உடையவராவர் என்பதை பாடல்வழி அறியலாம் (Balasankar, 2012).

"இல்லார்க்கு ஒன்று ஈயும் உடைமையும், இவ்வுலகின்

நில்லாமை உள்ளும் நெறிப்படும், எவ் உயிர்க்கும்

துன்புறுவ செய்யாத தூய்மையும், இம்மூன்றும்

நன்று அறியும் மாந்தர்க்கு உள்" (Balasankar, 2012)

## ஆசாரக்கோவை காட்டும் அறம்

ஆசாரங்களை அழகான மலைபோல் கோத்துக்கூறுதல் ஒழுக்கங்களை அடுக்கிக் கூறல் ஆசாரக்கோவையாகும்.

## ஆசாரவித்து

"நன்றி அறிதல், பொறையுடைமை, இன் சொல்லோடு

இன்னாத எவ் உயிர்க்கும் செய்யாமை, கல்வியோடு

ஒப்புரவு ஆற்ற அறிதல், அறிவுடைமை

நல் இனத்தாரோடு நட்டலின இவை எட்டும்

சொல்லிய ஆசாரவித்து"

நன்றி மறவாமை, பொறுமை, இன்சொல், பிற உயிர்களைத் துன்புறுத்தாமை, கல்வி ஒப்புரவு அறிதல், அறிவுடைமை, நல்ல இயல்புள்ளவர்கள் நட்பு இவை எட்டும் அறிஞர்களால் சொல்லப்பட்ட நல் ஒழுக்கங்கள் என்பதே இப்பாடல் வழி ஆசிரியர் அறிவுறுத்தும் அறமாக கொள்ளப்படுகிறது (Balasankar, 2012).

## அறம் சொல்வதற்கும் விருந்து அளித்தவர்க்கும் உரிய நாட்கள்

"கல்யாணம், தேவர், பிதிர், விழா, வேள்வி என்று

ஐவகை நாளும் இகழாது, அறம் செய்க,

பெய்க, விருந்திற்கும் கூழ்"

தன் கல்யாண நாளிலும், தேவர்க்கு சிறப்பான நாளிலும், பிதிருக்களுக்கு சிறப்பு செய்யும் நாளிலும், விழா நாளிலும், வேள்வி செய்யும் நாளிலும், விருந்தினருக்கு சோறிட்டுக் கொடை அறம் செய்தலே சிறந்த அறம் என்கிற இப்பாடல் வழி அறியலாம்.

## நல்ல நெறி

"பெரியார் உவப்பன தாம் உவலார் இல்லம்

சிறியாரைக் கொண்டு புகா அர் அறிவு அறியாய்

பிள்ளையேயானும் இழித்து உடையார், தம்மோடு

அள்வளாவு இல்லா இடத்து"

பெரியோர்கள் விரும்புனவற்றைத் தாம் விரும்ப மாட்டார் கீழ்மக்களை வீட்டினுள் அழைத்துக்கொண்டு வரமாட்டார். தன்னுடைய பிள்ளையே ஆயினும் இழிவாகப் பேசமாட்டார், தம்மோடு நட்பாக இல்லை என்றாலும் மற்றவர்களை இகழ்ந்து பேசமாட்டார் என்ற கருத்து இப்பாடல்வழி அறியப்படுகிறது (Balasankar, 2012).

## பழமொழி நானூறு கூறும் அறம்

பழமொழி நானூறு என்னும் அறநூலில் ஒவ்வொரு வெண்பாவின் இறுதியிலும் பழமொழி உள்ளது. சங்க காலத்திலும் பழமொழி வழக்கில் இருந்தது. செய்யுள் தோறும் பழமொழியை பெற்று வரும் முதல் அறநூல் இதுவாகும்.

## தருமம் செய்தல் அறம்

மக்களாகப் பிறக்க வேண்டும் எனில் பெறும் தவம் செய்தல் வேண்டும், அப்படிப் பிறந்தால் நம் இளவயதில் இருந்தே நம்மால் முடிந்தவரை தருமம் செய்தல் நன்று பின்பு செய்யலாம் என்று நினைத்தால் முதுமையாகி விடும் அப்போது நம்மால் தருமம் செய்ய இயலாது போகும் என்பதை,

"தோற்றம் அரிதாய மக்கட் பிறப்பினால்

ஆற்றும் துணையும் அறஞ்செய்க - மாற்றின்றி

அஞ்சும் பிணிமூப்பு அறங்கூற் றுடனியைந்து

துஞ்ச வருமே துயக்கு" (Balasankar, 2012)

## தருமம் செய்யப் பாவம் போகும் அறம்

செல்வத்தைத் தேடுவதற்கு வேண்டிய புறச்செயல்களை செய்ய, வறுமை நீங்கிச் செல்வமானது பெருகும். அது போல நல்ல தருமங்களைச் செய்யப் பழைய பாவங்கள் எல்லாம் நீங்கிப் போய்விடும். ஆதலால் தருமஞ்செய்யும் இடத்தின் தகுதிகளை அறிந்து செய்த காலத்திலே, தருமம் செய்பவர்களுக்கு அவர்கள் செல்லும் மறுமை உலகத்தின் கண் நன்மை உண்டாகும் என்பதை இப்பாடல் வழி அறியப்படுகிறது

"அறஞ்செய் பவர்க்கும், அறவழி நோக்கித்

திறந்தெரிந்த செய்தக்கால், செவ்வுழி நன்றாம்

புறஞ்செய்யச் செல்வம் பெருகும், அறஞ் செய்ய

அல்லவை நீங்கி விடும்" (Balasankar, 2012)

## கொடுக்கக் கொடுக்கப் பெருகும் அறம்

செல்வம் மிக்கவர்கள் மற்றவர்களுக்குக் கொடுத்து உதவுவது சிறந்த அறம் எனப்படும். அச்செல்வம் மற்றவர்களுக்கு பயன்பெறும் வகையில் அமையும். அவர்களிடம் இருந்து மற்றவர்களிடம் சொல்லி அவர்களை வாழ்த்துவர். கிணற்றில் இருக்கும் நீரானது மற்றவர்கள் பயன்படுத்தும் போது அந்த நீர் இறைக்க இறைக்க ஊறும். தண்ணீரும் சுவையானதாக இருக்கும். அது போல மற்றவர்களுக்கு கொடுத்துப் பயன் பெறுவது நன்று என்பதை,

"இரப்பவர்க்கு ஈயக்குறைபடும் என் றெண்ணிக்

கரப்பவர் கண்டறியார் கொல்லோ - பரப்பில்

துறைத்தோணி நின்றுலாம் தூங்குநீர்ச் சேர்ப்ப,

இறைத்தொறும் ஊறும் கிணறு" (Balasankar, 2012)

## சிறுபஞ்சமூலம் காட்டும் அறம்

அம்மை எனத் தொல்காப்பியர் குறிப்பிடும் வனப்பில் அடங்கும் நூல் சிறுபஞ்சமூலம். உலகிற்கு வரும் பஞ்சத்தை மழை போக்கும். உடலுற்கும், உள்ளத்திற்கும் வரும் நோயை சிறுபஞ்சமூலம் நீக்கும். ஒவ்வொரு பாடலிலும் ஐந்து அறக்கருத்துக்கள் இடம்பெறுவதால் சிறுபஞ்சமூலம் எனப்பட்டது.

"பொருள் உடையான் கண்ணதே, போகம் அறனும்,

அருள் உடையான் கண்ணதே ஆகும் அருள் உடையான்

செய்யான் பழி பாவம் சேரான், புறமொழியும்

உய்யான் பிறன் செவிக்கு உய்த்து

பொருள் உடையவன் இன்பத்தை அடைவான், அருள் உடையான் அறம் செய்வான் என்பதும் அருளுள்ளவன் பழியையும், பாவத்தையும், பிறரை பழிபடக் கூறும் புறமொழிகளைக் கூறுதலை செய்யமாட்டான் என்ற அறம் பாடல் வழி அறியப்படுகிறது (Balasankar, 2012).

“கற்புடைய பெண் அமிர்து, கற்று அடங்கினான் அமிர்து,

நற்பு உடைய நாடு அமிர்து, நாட்டுக்கு நற்பு உடைய

மேகமே சேர் கொடி வேந்து அமிர்து சேவகனும்

ஆகவே செய்யின், அமிர்து”

கற்புடைய பெண் அவளின் கணவனுக்கு அமிர்தம் போன்றவள், கற்றுப் பொறிகளைந்தையும் அடக்கியவன் உலகத்திற்கு அமிர்தம் போன்றவன், நற்செயல்களை உடைய நாடுகள் அந்நாட்டிற்கு நன்மையைச் செய்யும் வேந்தனுக்கு அமிர்தம் போன்றது. அவனுக்கு நன்மை செய்யும் சேவகன் அமிர்தமாகும் என்ற அறம் பாடல்வழி அறியப்படுகிறது (Balasankar, 2012).

“உடம்பு ஒழிய வேண்டின், உயர் தவம், மற்று உண்டு

இடம் பொழிய வேண்டுமேல், ஈகை, மடம் பொழிய

வேண்டின், அறிமடம், வேண்டேல், பிறர் மனை

ஈண்டின், இையயும் திரு”

ஒருவன் தன் பிறவியை ஒழிக்க தவமும், புகழையுடைய ஈகையும், உள்ளத்தூய்மையாய் இருக்க அறிந்தும் அறியாமையும், பிறர் மனையாளை விரும்பாமையும், நாடோறும் வருவாய் சிறியதாக இருந்தாலும் செல்வமும் வேண்டிய அளவு வந்து சேரும் என்பது பாடல் வழி அறியப்படும் அறக்கருத்தாகும் (Balasankar, 2012).

## ஏலாதி காட்டும் அறம்

ஏலாதி என்பது மருந்தின் பெயர், ஏலம், இலவங்கம், நாவற்பு+, சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய ஆறு பொருட்களின் கலவை, உடல் நோயைத் தீர்க்கும் ஒவ்வொரு வெண்பாவிலும் ஆறு விதமான அறக்கருத்துக்கள் உள்ள நூல் ஏலாதி

“துறந்தார்கண் துன்னி, துறவர்க்கு இடுதல்,

இறந்தார்க்கு இனிய இசைத்தல், இறந்தார்

மறுதலை, சுற்றம், மதித்து ஓபுவானேல்,

இறுதல் இல் வாழ்வே இனிது”

துறவிகளுக்கு ஈதலும், கல்வி கற்றவருக்கு இனிய சொற்களைக் கூறுதலும், தனக்குத் தீமை செய்பவர்களையும், தம் உறவினர்களையும் மதித்துப் போற்றுவானாயின் அவனது இல்வாழ்க்கை துறவு வாழ்க்கையைவிட இனிதாக இருக்கும் என்ற அக்கருத்தை இப்பாடல் வழி அறியமுடிகிறது (Balasankar, 2012).

"பார்ப்பார், பசித்தார், தவசிகள், பாலர்கள்

கார்ப்பார், தமை யாதும் காப்பு இலார், தூப் பால

நிண்டரால் எண்ணாது நீத்தவர் - மண் ஆண்டு

பண்டாரப் பற்ற வாழ்வார்"

அந்தணர், பசித்தவர், தவம் செய்பவர், குழந்தைகள் பிறரால் வெறுக்கப்படுவோர், ஆதரவற்றோர், நல்ல ஒழுக்க பண்பு உடையோர் என்று அனைவருக்கும் பயன் கருதாமல் அவர்களின் துன்பங்களை நீக்கியவர்கள் அரசனைப் போல் இன்பத்துடன் வாழ்வார் என்ற அறம் அறியப்படுகிறது (Balasankar, 2012).

"வணங்கி. வழி ஒழுகி, மாண்டார் சொல் கொண்டு,

நுணங்கிய நூல் நோக்கி, நுழையா, இணங்கிய

பால் நோக்கி வாழ்வான் - பசி இல்லா மன்னனாய்,

நூல் நோக்கி வாழ்வான், நுனித்து"

பிறரை வணங்கி, சான்றோர் சொல் கேட்டு, நுண்ணிய நூல்களைக் கற்று அந்நூற் பொருள்களில் தம் அறிவைச் செலுத்தி அதன்படி வாழ்கின்றவன் வடுவில்லா வேந்தனாய், அறிவு நூல்களையும், நுட்பமாய் ஆராய்ந்து வளர்ந்து பெருவாழ்வை வாழ்வான் என்ற அறக்ககருத்தே இப்பாடல் முன்வைத்துள்ளது (Balasankar, 2012).

## முதுமொழிக்காஞ்சி கூறும் அறம்

முதுமொழிக்காஞ்சி ஒரு நீதி நூல், குறள்வெண் செந்துறையில் இயன்ற பாக்கள், ஒவ்வொரு பத்தும், இல்லைப் பத்து, எளிய பத்து, சிறந்த பத்து என்று அமையும். பத்துப் பிரிவுகளை உடையநூல் ஒவ்வொரு பத்திலும் பத்துப்பாடல்கள் அமைந்துள்ள அறநூலாகும்.

## சிறந்த பத்து

"ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்

ஓதலின் சிறந்தன்று, ஒழுக்கம் உடைமை"

ஓசையினை உடைய கடல் சூழ்ந்த உலகத்தில் உள்ளவர்கள் எல்லாம், கற்றலை விட ஒழுக்கத்துடன் இருப்பது சிறந்த அறம் என அறியப்படுகிறது.

"காதலின் சிறந்ததன்று, கண் அஞ்சப்படுதல்"

பிறர் அன்பு பாராட்டும்படி நடத்தலை விட அவர் மதிக்கும்படி நடத்தலே மேலான அறமாகும்.

"மேதையின் சிறந்ததன்று, கற்றது மறவாமை"

புதிதாக ஒன்றை அறிந்து கொள்வதை விட கற்றதை நினைவில் வைத்திருப்பது மேலானது

"வன்மையின் சிறந்ததன்று, வாய்மை உடைமை"

செல்வத்தினும் சிறப்புடையது உண்மை வாழ்க்கையாகும்.

"இளமையின் சிறந்தன்று, மெய் பிணி இன்மை"

நோயில்லாமல் இருத்தல் இளைமையில் சிறப்பானது

“நலன் உடமையின் நானுச் சிறந்தன்று”

அழகைக் காட்டிலும் வெட்கம் சிறப்பான அறமாகும்

“குலன் உடைமையின் கற்புச் சிறந்ததன்று”

உயர்ந்த குலத்தைக் காட்டிலும் கல்வி மேன்மையானது

“கற்றலின் கற்றாரை வழிபடுதல் சிறந்ததன்று”

கற்றலை விடக் கற்றாரை வழிபட்டொழுகுதல் மேலானது

“செற்றாரைச் செறுத்தலின் தற் செய்கை சிறந்ததன்று”

பகைவரை வெல்வதைவிட தன்னை மேம்படுத்திக்கொள்வது சிறப்பானது.

“முன் பெருகலின் பின் சிறுகாமை சிறந்ததன்று”

செல்வம் பெருகி அழிவதை விட, பெருகாமல் நிலையாக இருத்தல் நன்று என்று முதுமொழிக்காஞ்சி வழி சிறந்த பத்து அறங்களை பாடல்வழி அறியமுடிகிறது.

## முடிவுரை

தன்னை நாடிவரும் மனிதர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் இருக்கின்றதை எல்லாம் கொடுத்து வாழ்ந்த மகாபாரத கர்ணன் போல இன்றைய இளைஞர்கள் அறநூல்களின் கருத்துக்களை பின்பற்றி வாழ்தல் வேண்டும். தருபவன், தருபவனாய் இருமையும், பெருமை பெறுகிறான். கொடுப்பவனே குலமகனாய் உயர்வான் இட்டு வாழ்வதே இனிய வாழ்வாகும். வானம் கைம்மாறு கருதாமல் உலகிற்கு மழையைப் பொழிகிறது. அதுபோல் உதவிபுரிபவன் வானவராய் உயர்ந்து திகழ்கின்றான், அறம் செய்து வாழ்ந்ததால் கடையெழு வள்ளல்கள் புகழ்பெற்றனர். கொடுப்போரையே வள்ளல் என உலகம் சொல்லி வருகிறது. பகுத்து உண்ணும் இயல்பினால் காக்கையும் உயர்ந்தது. அறநூல்கள் வழி அறியலாகும் கருத்துக்களான நன்றி மறவாமை, அன்புகாட்டல், பொறுமை, தருமம் செய்தல், உயிர்களிடம் அன்புகாட்டல், தன்னடக்கம், நாவடக்கம், வாய்மை, இன்னாசெய்யாமை, கல்வி, சிறந்த நட்பு, ஒழுக்கம், இனியவை கூறல், ஊக்கம் உடைமை, ஈகை போன்ற அறநூல்களின் படி கருத்துக்களை பின்பற்றி வாழ இக்கட்டுரை பல்நோக்கு பார்வையில் ஆய்வு செய்து முன்வைத்துள்ளது. அறம் என்ற உயரிய பண்பை போற்றி பாதுகாத்து வருபவர்கள் பலதரப்பட்டவர்களாக இருப்பினும் தமிழனுக்கு நிகர் எவரும் இல்லை. அறநூல்கள் அக்கால தமிழ் சமூகத்திற்கு மட்டும் அல்ல, எக்காலத்திற்கும் பயன்படும் விதமாக உள்ளதே இக்கட்டுரையின் உள்ளார்ந்த கருத்தாகும் இன்றைய இளைஞர்கள் காலத்தின் தேவையை உணர்ந்து தன்னை நேசிப்பதைப் போல பிற உயிர்களையும் நேசிக்க வேண்டும். செல்வத்தை அறவழியில் பெற்று அனைவருக்கும் பகிர்ந்து அளித்து வாழ வேண்டும். நாடு போற்றும் வகையில் வாழ்ந்த மாபெரும் மகான்கள் போல் வாழ்வதற்கு இன்றைய இளைஞர்கள் உறுதி ஏற்க வேண்டும். ஒவ்வொரு இளைஞர்களும் தங்களால் இயன்ற அளவிற்கு ஏதேனும் ஒரு அறத்தை செய்வதற்கு முன்வரவேண்டும். எப்படியும் வாழலாம் என்பதை விட்டுவிட்டு இப்படித்தான் வாழ வேண்டும் என்று நமக்கு வழிவுறுத்தல் பதினெண்கீழ்கணக்கு அறநூல்களின் கருத்துக்களை கடைபிடித்து வாழ்ந்தால் வாழ்வு சிறக்கும் என்பதே இக்கட்டுரையில் உணர முடிகின்றது.

## References

Balasankar, (2012) Semmozhi Ilakkiyam Pathenkelkanakum Chennai Pathippagam, Chennai, India.

Jagaveerapandiayanaar, (2012) Needhi Noolkal, Nallaram Pathippagam, Chennai, India.

Puliyur Kesikan, (2008) Thirukkural Thelivurai, Paari Nilayam, Chennai, India.

Puliyur Kesikan, (2013) Manimegalai, Paari Nilayam, Chennai, India.

Subbu Reddyar. N. (2012) Subbu Reddyar Noor Kalanjiyam, Sri Venkateshwara Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License